VISIT…

அன்புடையீர் வணக்கம்,

தமிழம் வலையில் இலவசமாக வலையிறக்கிக் கொள்ள வைத்துள்ள, குறுவட்டும், பாடங்களும் எழுத்துகளை அறிமுகப்படுத்திச் சொற்களைக் கற்பிக்கும். இவை ஓரளவிற்கு மாணவர்களுக்கான படித்தல் திறனுக்கு அடித்தளம் அமைக்கும். இதன் தொடர்ச்சியாக, ஊக்கமூட்டுகிற, தொடர்களைப் படிக்க ஊக்குவிக்கிற, இயல்பாக அமைந்துள்ள, எளிய தொடர்களை உடைய சிறுகதைகளைப் படிக்க மாணவர்களுக்குத் தரவேண்டும்

இந்த நோக்கில் தேடியபொழுது, இதுவரை குழந்தைகளுக்காக எழுதப்பட்டுள்ள பல சிறுகதை நூல்களும், அயற்சொற்களுடன், பிற்போக்குத் தனத்தையும், மூடப்பழக்கத்தினையும், இயல்புக்கு மாறானவற்றையும், மத சாதி கருத்துகளின் ஊதுகுழலாகவும், மூளையை மழுங்கடித்து சோம்பலாக்குபவையாகவும், இருப்பது உணரப்பட்டது.

இதனை மாற்றிட, மாணவர்களுக்கான சிறுகதைகளை மாணவர்களே எழுத வேண்டும் என்று எண்ணி 4, 5 ஆம் வகுப்பில் எமது தாய்த்தமிழ்த் தொடக்கப்பள்ளியில் படிப்பவர்களிடம் கருத்தை விதைத்து, சிந்திக்கச் சொன்னதன் விளைவே இந்தக் கதைகள். அவர்களது மனதில் இயல்பாக எழுகிற நினைவலைகளுக்கு, வடிவம் தந்து, ஒவ்வொரு கதையின் இறுதியிலும் ஒரு வழிகாட்டுதலை இணைத்து உருவாக்கப்பட்டவையே இக்கதைகள்.

தற்பொழுது பொதுவாக உள்ள சிறுகதைகளின் முடிவுகளில் சில மாற்றங்களைச் செய்து, (காகம் - நரி கதையில், காகம் தன் காலில் வடையைப் பிடித்துக் கொண்டு - நான் புத்திசாலிக் காகம் எனப் பாடியது போல மாற்றி) இருந்தாலும் அவையும் ஏற்றுக் கொள்ளத் தக்கனவே.

இத்தொகுப்பில் 21 சிறுகதைகள் உள்ளன. இன்னும் நிறைய சிறுகதைகளை நாம் உருவாக்க வேண்டும். இது போல மாணவர்களிடமிருந்து, மாணவர்களுக்காக நிறைய சிறுகதைகளை நாம் உருவாக்குவோமாக.

அன்புடன்
பொள்ளாச்சி நசன்
www.thamizham.net பொள்ளாச்சி 6, தமிழ்நாடு.

மழலையர்களுக்கான

சிறுகதைகள்

சிறுகதைகள்

1. குட்டிநாய்

அன்பன் தாய்த் தமிழ்ப் பள்ளியில் முதல் வகுப்பில் படிப்பவன். அன்பன் வீடு புதுத் தெருவில் உள்ளது. அன்பன் வீட்டில் அம்மா, அப்பா, தாத்தா உள்ளனர். அன்பன் அனைவரிடமும் அன்பாக இருப்பான்.

ஒருநாள் பள்ளி முடிந்து வீட்டுக்கு வரும்பொழுது, குட்டிநாய் ஒன்று அடிபட்டுக் கிடப்பதை அன்பன் பார்த்தான். நாய் பசியோடு கிடந்தது. நாயின் கண்களில் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது.

அன்பன் நாயின் அருகில் சென்றான். நாய் எழுந்து ஓட முயன்றது. காலில் அடிபட்டதால் அதனால் ஓட முடியவில்லை. நாய் பசியோடு மயங்கிக் கிடந்தது. அன்பன் தன் பையிலிருந்த தின்பண்டத்தை எடுத்துப் போட்டான். நாய் சாப்பிட்டது. நாய் நன்றியோடு பார்த்தது. வாலை ஆட்டியது.

குட்டிநாய் அழகாக இருந்தது. அன்பன் அந்தக் குட்டிநாயை வீட்டுக்கு எடுத்துச் சென்றான். அன்பனின் தாத்தா குட்டிநாயின் காலுக்கு மருந்து தடவினார். குட்டிநாய் அந்த வீட்டிலேயே மகிழ்வாக இருந்தது.

அன்பன் எங்கு சென்றாலும், குட்டிநாய் வாலை ஆட்டிக் கொண்டு அன்பன் கூடவே வரும். இருவரும் இறுதிவரை நல்ல நண்பர்களாக இருந்தனர்.

2. மல்லிகைச் செடி

வேல்விழி ஐந்து அகவை உடையவள். பூஞ்செடிகளைக் கண்டால் மகிழ்ச்சியாக இருப்பாள். அந்த இடத்தை விட்டு நகரமாட்டாள். செடிகளைத் தொட்டுப் பார்த்து மகிழ்வாள். இலைகளை

அன்போடு தடவுவாள்.

அவளது மாமா ஒரு மல்லிகைச் செடி வாங்கி வந்தார். மல்லிகைச் செடியைக் கண்ட வேல்விழி மகிழ்வோடு ஆடினாள். அன்று இரவு தூங்கவே இல்லை. எப்பொழுது விடியும் செடியை நடலாம் என்று விழித்துக் கொண்டே இருந்தாள். அன்று இரவு முழுவதும் தூங்கவே இல்லை.

ஐந்து மணிக்கே எழுந்து மாமாவைக் கிளப்பினாள். கடப்பாரையால் குழி தோண்ட உதவி செய்தாள். மாமா வீட்டு ஓரத்தில் மல்லிகைச் செடியை நட்டு தண்ணீர் ஊற்றினார்.

வேல்விழி ஒவ்வொரு நாள் காலையிலும் அந்த மல்லிகைச் செடிக்குத் தண்ணீர் ஊற்றுவதை அன்போடு செய்தாள். ஐந்தாவது நாள் காலையில் மல்லிகைச் செடியில் ஒருசின்ன இலை துளிர்த்து இருந்தது. தண்ணீர் ஊற்ற வந்த வேல்விழி அந்தத் துளிர் இலையையே பார்த்துக்கொண்டு இருந்தாள். அவளுக்கு மகிழ்ச்சி பொங்கியது.

தொடர்ந்து தண்ணீர் ஊற்றினாள். மல்லிகைச் செடி பூத்துக் குலுங்கியது. வீட்டுக்கு வரும் அனைவரும் வேல்விழியை அன்பாகப் பாராட்டினார்கள்.

3. காகமும் சுடரொளியும்

கா... கா.... என்று கத்திக்கொண்டு அந்தக் காகம் பறந்து வந்தது. அருகிலுள்ள மரக்கிளையில் அமர்ந்தது.

சுடரொளி அந்தக் காகத்தைப் பிடிக்க ஓடினான். உடனே அது பறந்தது. சுடரொளி திரும்பி வந்தான். அந்தக் காகம் மீண்டும் அங்கு வந்து நடந்தது. சுடரொளி தான் தின்று கொண்டிருந்த வடையைப் பிய்த்துக் காகத்திற்குப் போட்டான்.

காகம் வேகமாக ஓடிவந்தது. வடையைக் கொத்திக்கொண்டு பறந்தோடியது. சுடரொளிக்கு அந்தக் காகத்தைப் பிடிக்கவேண்டும்

என்ற ஆசை எழுந்தது. வெகுநேரம் காத்திருந்தான். அந்தக் காகம் மீண்டும் வரவேயில்லை.

இரண்டாம் நாள், அந்த இடத்திற்கு அதே நேரத்திற்கு அந்தக் காகம் வந்தது. அங்கும் இங்கும் நடந்தது. இன்று அந்தக் காகம் கைக்கு எட்டும் தொலைவிற்குள் நடந்து வந்தது. சுடரொளி தன்னிடம் இருந்த நிலக்கடலையை காகத்தின் முன் வீசினான். காகம் தலையைச் சாய்த்துச் சாய்த்துப் பார்த்துக் கொண்டே ஒவ்வொரு கடலையாகக் கொத்தித் தின்றது. சுடரொளி அருகில் சென்றதும் உடனே பறந்தோடியது.

மூன்றாம் நாளும் அந்தக் காகம் அந்த இடத்திற்கு, அதே நேரத்திற்கு வந்தது. இன்று அச்சப்படாமல் காகம் சுடரொளியின் அருகில் வந்தது. சுடரொளியின் கையை ஆவலோடு பார்த்தது. சுடரொளி வீட்டிற்குள் சென்று அரிசியை எடுத்து வந்து போட்டான். காகம் பொறுமையாக ஒவ்வொரு அரிசியாகப் பொறுக்கித் தின்றது. சுடரொளி காகத்தைப் பிடிக்க எழுந்தான், காகம் பறந்தோடியது.

ஒவ்வொரு நாளும் காகம் சரியான நேரத்திற்கு வந்தது. சுடரொளியும் காகமும் நண்பர்களானார்கள். சுடரொளி சொல்லுவதைக் கேட்டு, காகம் புரிந்து கொண்டது போலத் தலையை ஆட்டும்.

சரியான நேரத்திற்கு வரும் காகத்தைக் கண்டு சுடரொளி வியந்தான். காகத்தால் எப்படி முடிகிறது ? மணிக்கூடு இல்லை, பேசத் தெரியாது, எழுதத் தெரியாது, ஆனால் சரியான நேரத்திற்கு அந்தக் காகம் எப்படி வந்து போகிறது. சுடரொளி வியந்தான்.

தனது நண்பனான காகத்தைப்போல, தானும் சரியான நேரத்திற்குப் பள்ளிக்குச் செல்வது, அனைத்து வேலைகளையும் சரியான நேரத்தில் தொடங்குவது என முடிவு எடுத்துக் கொண்டான்.

சரியான நேரத்திற்குப் பள்ளிக்கு வந்து அனைத்தையும் முறையாகச் செய்யும் சுடரொளியை அனைவரும் பாராட்டினார்கள்.

4. பட்டாம்பூச்சி

அந்த வெள்ளைப் பட்டாம் பூச்சி அழகாக இருந்தது. ஒவ்வொரு பூவிலும் அமர்ந்து அமர்ந்து எழுந்தது. பறக்கும் பொழுது இரண்டு இறக்கைகளை அடித்துக் கொண்டு பறந்தது. பூவில் அமரும் பொழுது இறக்கைகளை அடிக்காது அசைவில்லாமல் இருந்தது.

பட்டாம் பூச்சி பறக்கும் பொழுது கூடவே ஓடுவது மகிழ்ச்சியாக இருக்கும். தமிழ்ச்செல்வியும் அழகனும் பட்டாம் பூச்சியின் கூடவே ஓடுவார்கள்.

அன்று ஞாயிற்றுக் கிழமை. பள்ளி விடுமுறை. தமிழ்ச் செல்வியும், அழகனும் தோட்டத்திற்குச் சென்றனர். வெள்ளைப் பட்டாம் பூச்சி பறந்து வந்தது. இருவரும் கூடவே ஓடினார்கள். பட்டாம் பூச்சி ஒவ்வொரு பூவிலும் அமர்ந்தது. எழுந்தது. ஓடியது.

தோட்டத்தின் மூலையில் ரமேசு இருந்தான். அவன் ஒரு பட்டாம்பூச்சியின் காலில் நூலைக்கட்டி, பறக்க விட்டுக் கொண்டிருந்தான். பட்டாம் பூச்சி பறக்க முடியாமல் தவித்தது.

பட்டாம்பூச்சி தவிப்பதைப் பார்த்த தமிழ்ச் செல்வியும் அழகனும் வருந்தினர். ரமேசிடம் சென்று ஏன் இப்படிச் செய்கிறாய் என்று சண்டை போட்டனர். உன் காலில் கயிற்றைக் கட்டி இழுக்கட்டுமா என்றனர்.

சொன்னது போலவே, ரமேசின் காலில் கயிற்றைக் கட்டி இழுத்தனர். ரமேசால் ஓட முடியவில்லை. கயிறு கட்டிய கால் வலித்தது.

பட்டாம்பூச்சிக்கும் இப்படித்தானே வலிக்கும் என்று உணர்ந்தான். உடனே நூலை அறுத்துப் பட்டாம்பூச்சியைப் பறக்கவிட்டான். விடுதலையடைந்த பட்டாம்பூச்சி மகிழ்ச்சியாகப் பறந்தது.

5. வேப்பமரம்

அந்த வேப்பமரம் பெரியதாக இருந்தது. அந்த மரத்தில் கிளைகள் நிறைய இருந்தன. இலைகள் அதிகமாக இருந்தன. இலைகள் பச்சை நிறத்தில் இருந்தன. வேப்பமரத்தடியில் நிழல் இருந்தது. வேப்பமரத்தடியில் அமர்ந்தால் குளிர்ச்சியான காற்று வரும். பாய் போட்டுப் படுத்தால் தூக்கம் வந்துவிடும். சுகமாக இருக்கும்.

இளவரசும், செவ்வந்தியும் வேப்பமரத்தின் கிளைகளைப் பிடித்து ஏறினர். தொங்கினர். மரக்கிளையில் கயிறு போட்டு ஊஞ்சல் ஆடினர். ஒவ்வொரு நாளும் வேப்பமரத்து ஊஞ்சலில் மகிழ்வோடு விளையாடுவார்கள். வேப்பமரம் அவர்களது நண்பரானது.

ஒரு நாள் அந்த மரத்திற்குச் சொந்தக்காரன் வந்தான். மரத்தின் கிளைகளை எல்லாம் வெட்டினான். ஊஞ்சலையும் அறுத்துவிட்டான். மரம் மொட்டையாக நின்றது.

மரத்தைக் கண்ட இளவரசும், செவ்வந்தியும் வருத்தம் கொண்டனர். தன் நண்பரது கைகள் வெட்டப்பட்டதைக் கண்டு வருந்தி அழுதனர்.

யாரோ வைத்து வளர்த்த மரம் நமக்கு விளையாட உதவியது. நாமும் இதுபோல ஒரு மரத்தை வைத்து வளர்த்தால் பிறருக்கும் உதவுமல்லவா ? என்று நினைத்தனர்.

வேப்பமரத்தின் விதைகளைப் பொருக்கி எடுத்து வந்தனர். வீட்டுக்கு அருகில் விதைத்து நீர் ஊற்றி, வேப்பஞ்செடியை வளர்க்க ஆரம்பித்தனர்.

விதை முளைத்தது. செடி ஆகியது. மரம் ஆகியது. வீட்டுக்கு அருகிலேயே விளையாட ஆரம்பித்தனர்.

6. ஆட்டுக்குட்டி

அது கருப்பு வண்ண ஆட்டுக்குட்டி. அதன் உடல் பட்டுபோல இருக்கும். அது துள்ளித் துள்ளி ஓடும். அது மே.. மே.. என்று கத்தும். அதன் அம்மாவை நோக்கி ஓடும். அதன் அம்மாவிடம் பால் குடிக்கும். ஆட்டுக் குட்டியைக் கண்டால் செவ்வந்திக்கு மகிழ்ச்சி பொங்கும். ஆட்டுக் குட்டியைக் கட்டிப்பிடித்து முத்தம் கொடுப்பாள்.

ஒருநாள் அந்த ஆட்டுக்குட்டி அடுத்த வீட்டுத் தோட்டத்தில் நுழைந்தது. செடியைத் தின்றது. வீட்டுக்காரர் ஆட்டைப் பார்த்தார். ஓடிவந்தார். திருட்டு ஆடே.. ஓடு.. ஓடு என்று குச்சியால் அடித்தார். ஆட்டுக்குட்டி கத்திக்கொண்டு வெளியே ஓடியது.

ஆட்டுக்குட்டி தாயிடம் ஓடியது. அம்மாவைச் சுற்றிச் சுற்றி வந்தது. மே.. மே.. என்று தொடர்ந்து கத்தியது. குட்டி ஆடு துன்பப்படுவதைத் தாய் ஆடு கண்டது. தனது அருகில் வந்த குட்டி ஆட்டை அன்போடு நக்கியது. குட்டி ஆடு தாயின் உடம்போடு ஒட்டிக் கொண்டது.

தவறு செய்து வந்தாலும், குட்டி ஆட்டை அன்போடு அணைக்கும் தாய் ஆட்டைச் செவ்வந்தி பார்த்தாள். எனது அம்மா போல இந்த ஆடும் அன்பானதே என்று வாய் விட்டுக் கூறினாள். செவ்வந்திக்கு அம்மாவின் நினைவு வந்தது. வீட்டுக்கு ஓடினாள்.

அம்மாவின் அருகில் சென்று, அம்மா அம்மா ஆட்டுக்குட்டி, அம்மா அம்மா ஆட்டுக்குட்டி என்று அன்போடு பாடினாள். அம்மாவைச் சுற்றிச் சுற்றி வந்து பாடிக்கொண்டே ஆடினாள்.

அம்மா செவ்வந்தியை அன்போடு தூக்கி முத்தம் கொடுத்தாள்.

7. பசுங்கன்று

அந்தப் பசுங்கன்று அழகாக இருந்தது. உடல் முழுவதும் கருப்பாக இருந்தது. அதன் இரண்டு காதுகள் ஆடி ஆடி ஈ யை விரட்டியது. சுழன்று அடிக்கும் வால் கூட ஈ யை விரட்டியது.

அதன் மூக்கில் ஓட்டை போட்டு கயிறு மாட்டி இருந்தனர்.

ஒரு காகம் அந்தப் பசுங்கன்றின் அருகே வந்தது. மெதுவாக அதன் முதுகிலே அமர்ந்தது. பசுங்கன்று காதை ஆட்டியது. காகம் ஓடவில்லை. தலையை ஆட்டியது. காகம் ஓடவில்லை. வாலைச் சுழற்றி அடித்தது. காகம் ஓடவில்லை.

அந்தப் பசுங்கன்றின் முதுகில் ஒரு ஆறாத புண் இருந்தது. காகம் அந்தப் புண்னைக் கண்டது. மெதுவாகப் புண்னைக் கொத்தியது. சுவைத்தது. சுவையாக இருந்ததால் மகிழ்வோடு மீண்டும் கொத்தியது.

பசுங்கன்றுக்கு வலி பொருக்க முடியவில்லை. வேகமாக அசைந்து காகத்தை விரட்ட எண்ணியது. காகம் கொஞ்சம் மேலே பறந்ததே தவிர, கன்றை விட்டு நகரவே இல்லை. மீண்டும் மீண்டும் அமர்ந்தது. கொத்தியது.

வலி தாங்கமுடியாமல் கன்று மே... மே.. என்று கத்தியது. காகத்தைக் கண்ட தாய்ப்பசு, துள்ளிக் குதித்து ஓடி வந்தது. காகத்தைத் தன் கொம்புகளால் விரட்டியது. அச்சப்பட்டு நடுங்கிக் கொண்டிருந்த பசுங்கன்றைத் அன்போடு உடல் முழுவதும் நக்கிக் கொடுத்தது.

கொம்புகள் வளர்ந்து பெரியதாகும்வரை அந்தப் பசுங்கன்று காக்கைக்கு அச்சப்பட்டுதான் ஆகவேண்டும்.

8.வாழைமரம்

அது இனிப்பான பழம் தரும் வாழைமரம். அந்த வாழைக்கன்றை பக்கத்து ஊரிலிருந்து தாத்தா கொண்டு வந்தார். தோட்டத்தில் குழிதோண்டி நட்டு வைத்தார். ஒவ்வொரு நாளும் தவறாமல் தண்ணீர் ஊற்றினார்.

வாழைக்கன்று வேகமாக வளர்ந்தது. அதன் இலைகள் பார்ப்பதற்கு அழகாக இருந்தன. இலைகள் பட்டுத் துணிபோல வழவழப்பாக இருந்தன.

வாழைக்கன்று வளர வளர, அதைச் சுற்றிலும் நிறைய சிறு சிறு கன்றுகள் முளைத்தன. தாத்தா முளைக்கும் ஒவ்வொரு கன்றையும் வெட்டிக் கொண்டே இருந்தார்.

பக்கக் கன்றுகளை வெட்டி விட்டால்தான் தாய்க்கன்று குலை தள்ளுமாம். பெரிய பெரிய காய்களாகக் காய்க்குமாம். பக்கக் கன்றுகளை வெட்டாமல் விட்டுவிட்டால் நிறைய வாழைமரங்கள் வளருமே தவிர காய்க்கிற வாழைக்காய் பெரியதாக இருக்காதாம். தாத்தா சொன்னதைக் கேட்ட பொன்னிக்கு வியப்பாக இருந்தது.

வளருகிற அனைத்துக் கன்றுகளையும் வெட்டி விட்டால்தான் பெரிய பெரிய காய் கிடைக்கும் என்றால் அது வாழைமரத்துக்குச் செய்யும் துரோகம் அல்லவா? தாத்தா தன் நலத்தோடு தானே இதைச் செய்கிறார் – என்று மனதுக்குள் எண்ணினாள் பொன்னி.

தோட்டத்தில் வாழைமரம் குலை தள்ளியது. குலையில் பெரிய பெரிய காய்கள் இருந்தன. தாத்தா வாழைத்தாரை வெட்டினார். பழுக்க வைத்தார். ஒவ்வொரு பழமும் பெரியதாகவும், சுவையாகவும் இருந்தது. ஆனால் பொன்னி மட்டும் ஒரு பழம்கூடத் தொடவே இல்லை. இந்தப் பழம் உருவாகத் தாத்தா எத்தனை வாழைக் கன்றுகளை உயிரோடு வெட்டி இருக்கிறார் என்ற நினைவே பொன்னியின் நெஞ்சில் மேலோங்கி நின்றது.

9. வாழைப்பழம்

மலையமான் கடைக்குச் சென்று 50 காசு கொடுத்தான் வாழைப்பழம் வேண்டும் என்றான். கடைக்காரர் ஒரு பழம் பிய்த்துக் கொடுத்தார். பழம் சுவையாக இருந்தது. மலையமான் மகிழ்வோடு சாப்பிட்டான்.

பையிலிருந்து இன்னொரு 50 காசு எடுத்துக்கொடுத்து மீண்டும் பழம் கேட்டான். இந்த முறை கடைக்காரர் தந்த பழத்தின் ஒரு பகுதியில் கருப்பாக இருந்தது. அந்த இடத்தில் பழம் கெட்டியாக இருந்தது. பழத்தின் சுவையும் சுமார்தான்.

மலையமான் அந்தப் பழத்தைச் சாப்பிடாமல் தூ..தூ. என்று துப்பி வீசி எறிந்தான். மலையமானின் செயலைக் கண்ட கடைக்காரர். தம்பி பழத்தை ஏன் தூக்கி எறிகிறாய்? இந்தப் பழத்தை உருவாக்க அந்த மரம் எத்தனை பாடு பட்டிருக்கும்?

யாரோ ஒருவர் நட்டு, தண்ணீர் ஊற்றி, பாதுகாத்து, பத்துமாதம் உழைத்த பிறகு கிடைத்ததல்லவா அந்தப்பழம். அதை ஒரு நிமயத்தில் கடித்துத் தூக்கி எறிந்து விட்டாயே. இது சரியா? என்று கேட்டான்.

50 காசு பெரியதில்லை. இந்தப் பழம் உருவாக எத்தனை காலம், எத்தனை நண்பர்கள் உழைத்திருப்பார்கள் என்ற எண்ணம் மலையமானைத் தூண்டி விட்டது.

கடைக்காரரின் உதவியால் இரண்டு வாழைக் கன்றுகளை மலையமான் வாங்கினான். வீட்டுக்கு அருகில் நட்டு தண்ணீர் ஊற்றி வளர்க்கத் தொடங்கினான்.

மலையமானின் உழைப்பால் அந்த வாழைமரம், கிடு கிடுவென வளர்ந்தது. பழம் தந்தது. அந்தப் பழத்தின் தோல் கூட மலையமானுக்கு இனிப்பதாகவே தோன்றியது.

10. பச்சைக் கிளி

அந்தப் பச்சைக்கிளி அழகாக இருக்கும். சின்னப் பந்து போன்ற தலையும், சிவந்த மூக்கும், நீண்ட இறக்கையும், பச்சை வண்ணப் பட்டுத்துணி போன்ற உடலும் பார்க்க அழகாக இருக்கும். மரத்தின் உச்சியில் இருந்து கீழே பாய்ந்து வருவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

அன்று ஞாயிற்றுக் கிழமை. பள்ளி விடுமுறை. பச்சைக் கிளியைப் பிடித்து வளர்க்கலாமே என்ற ஆசை பாவண்ணனுக்கு எழுந்தது.

கிளி இருக்கும் அந்த மரத்தை நோக்கிச் சென்றான். மரத்தின் மீது ஏறினான். மரப்பொந்தில் கிளிக்குஞ்சு மட்டும் இருந்தது. தாய்க் கிளி இல்லை.

கிளிக்குஞ்சை எடுத்துப் பையில் போட்டுக்கொண்டு கீழே இறங்கினான். கிளிக்குஞ்சு கீ.. கீ.. என்று கத்தியது.

அட்டைப் பெட்டிக்குள் கிளிக்குஞ்சை வைத்தான். குடிப்பதற்கு ஒரு குவளையில் தண்ணீர் வைத்தான். உண்ணுவதற்கு கோவைப்பழம், கொய்யாப்பழம், அரிசி என அனைத்தும் உள்ளே வைத்தான்.

கிளிக்குஞ்சு ஒன்றையும் சாப்பிடவில்லை. கீ.. கீ..என்று கத்திக்கொண்டே இருந்தது. மறுநாள் காலையில் பாவண்ணன் பார்த்த பொழுது கிளிக்குஞ்சு மயங்கிக் கிடந்தது. கிளிக்குஞ்சு எதையுமே சாப்பிடவில்லை.

பாவண்ணன் மனம் வருந்தினான். கிளியை அந்த மரப் பொந்திலேயே வைத்துவிட எண்ணினான்.

பாவண்ணன் கிளிக்குஞ்சை எடுத்து வருவதைப் பார்த்த தாய்க்கிளி பாய்ந்தோடி வந்தது. பட படவென இறக்கையை

அடித்துக்கொண்டு அவன் தலைக்கு மேலாகப் பறந்தது. பாவண்ணன் கிளிக்குஞ்சை விட்டு விட்டு ஓடினான்

தாய்க்கிளி, கிளிக்குஞ்சை அன்போடு கொத்தியது. தன் வாயில் இருந்த பழத்தைக் கிளிக்குஞ்சுக்கு ஊட்டியது. தாய்க் கிளியைக் கண்ட கிளிக்குஞ்சு மகிழ்வாக எழுந்தது. தாயின் அருகில், தன் சொந்த இடத்திற்கு வந்ததை அறிந்த கிளிக்குஞ்சு ஊக்கத்தோடு எழுந்து நடந்தது.

11. குரங்குக்குட்டி

குரங்குக்குட்டி பல்லைக்காட்டி அனைவரையும் மிரட்டியது. குரங்குக்குட்டிக்கு ஒல்லியான கைகளும், கால்களும், இருந்தன. தனது நீண்ட வாலால் மரத்தின் கிளையைப் பிடித்துக்கொண்டு தலைகீழாகத் தொங்கியது. தலையில் அலுமினியப் பாத்திரத்தை வைத்துக்கொண்டு ஆடி ஆடி நடந்தது.

குரங்காட்டி குரங்குக்குட்டியின் இடுப்பில் கயிற்றைக் கட்டியிருந்தான். கையிற்றைச் சுண்டியிழுத்த பொழுதெல்லாம் குரங்குக் குட்டி, குட்டிக்கரணம் அடித்தது.

குரங்காட்டி பாடினான். குரங்குக்குட்டி ஆடியது.

பார்த்துக்கொண்டிருந்த மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். காசுகளை விரித்திருந்த துணியில் போட்டனர்.

குரங்குக்குட்டி காசு ஒன்றை எடுத்துக் கடித்துப் பார்த்தது. காசை அதனால் தின்ன முடியவில்லை. குரங்காட்டியைப் பார்த்தது. குரங்காட்டி பையிலிருந்து ஒரு வாழைப்பழத்தை எடுத்து குரங்குக்குட்டிக்குக் கொடுத்தான். குரங்குக்குட்டி மகிழ்வோடு தின்றது. குரங்காட்டி காசுகளை எடுத்துப் பையில் போட்டுக்கொண்டு நடந்தான்.

குரங்குக்குட்டி ஆடுவது பழத்திற்காக
குரங்காட்டி பாடுவது காசுக்காக.

12. கருப்புப்பூனையும் எலியும்

கருப்புப்பூனை மெதுவாக நடந்தது. அதன் இரண்டு கண்களும் பளிச் பளிச் என்று மின்னின. நீண்ட வால் செங்குத்தாக நிமிர்ந்து நின்றது. அதன் கால்கள் மெத்தை போன்று மெதுவாக இருந்தன. கூரிய வளைந்த நகங்கள் விரல் இடுக்கில் மறைந்து இருந்தன.

பானை ஓரத்தில் எலிக்குட்டி ஒன்று இருந்தது. கருப்புப் பூனை அடிமேல் அடிவைத்து மெதுவாக நடந்தது. எலிக்குட்டி தேங்காய்த் துண்டைக் கொறித்துக் கொண்டிருந்தது.

கருப்புப் பூனை தனது பின்னங்காலைத் தரையில் ஊன்றி எலிக்குட்டியின் மேல் தாவியது. எலிக்குட்டி பானையின் அடியில் போய் ஒளிந்து கொண்டது. பூனையால் எலிக்குட்டியைப் பிடிக்க முடியவில்லை.

ஏமாந்த பூனை கோபப்பட்டது. தனது கூர்மையான நகத்தால் பானையைப் பிராண்டியது. மியாவ் மியாவ் என்று கத்தியது. பானையைச் சுற்றிச் சுற்றி வந்தது. எலிக்குட்டி உள்ளே போய் ஒளிந்து கொண்டது.

எலிக்குட்டிக்குக் கால்கள் நடுங்கியது. குட்டையான வாலும் நடுங்கியது. பூனை தன்னைத் தின்றுவிடும் என்று அச்சப்பட்டது. எப்படியாவது பூனையிடம் இருந்து தப்பிக்கத் திட்டமிட்டது.

அருகில் கிடந்த துணியைச் சுருட்டி, மெதுவாக வெளியே நீட்டியது. பூனை துணியை எலி என்று நினைத்தது. துணியைப் படக் என்று தாவிப்பிடித்து இழுத்துக் கொண்டு ஓடியது. பூனை ஓடியதும் எலிக்குட்டி தாவிக்குதித்து வெளியே ஓடியது. பூனையிடம் இருந்து தப்பித்தது.

ஏமாற்றிய எலி மகிழ்வோடு ஓடியது.

ஏமாந்த பூனை அந்த அறையைச் சுற்றிச் சுற்றி வந்தது.

13. வெள்ளிக் கொலுசு

வான்மதி கொலுசு போட்டு இருந்தாள். வான்மதி காலில் கொலுசு பளபளத்தது. வான்மதி நடக்கும்பொழுது கொலுசு ஒலி எழுப்பியது. வான்மதி புதுக் கொலுசை ஆசையோடு போட்டுக்கொண்டு பள்ளிக்குச் சென்றாள். தோழிகளிடம் காட்டி மகிழ்ந்தாள். தோழிகள் ஆசையோடு தொட்டுப் பார்த்தனர்.

காலில் உள்ள கொலுசு , கீழே விழுந்து விடுமோ என்ற அச்சத்தில் வான்மதி மெதுவாக நடந்தாள். தோழிகள் அனைவரும் ஓடியாடி விளையாடினர். வான்மதி அமைதியாக அமர்ந்து இருந்தாள்.

பள்ளி மணி அடித்தது. வகுப்பு அக்கா வந்தார். வருகைப் பதிவேடு எடுத்தார். வான்மதி எழுந்து உள்ளேன் அக்கா என்று கூறினாள். வான்மதி எழுந்தபொழுது கொலுசு ஓசை எழுப்பியது. அக்கா வான்மதியையை அழைத்தார்.

வான்மதி நீயே தங்கம், உனக்கு எதற்கு வெள்ளிக் கொலுசு? தொலைந்து விட்டால் துன்பம் தானே. யாரும் கொலுசு போடாத பொழுது நீ மட்டும் கொலுசு போட்டால் மற்றவர்களுக்கு வருத்தம் ஏற்படும் அல்லவா ? நாளைக்குக் கொலுசை வீட்டில் வைத்துவிட்டு வருவாயா என் தங்கமான வான்மதியே என்று அன்போடு கேட்டார் அக்கா.

வான்மதி அக்காவைக் கட்டிப்பிடித்துக் கொண்டு சரி அக்கா என்று அன்போடு கூறினாள்.

அன்று முதல் வான்மதி மட்டுமல்ல, வகுப்பில் உள்ள யாருமே விலை உயர்ந்த அணிகலன்களை அணிந்து பள்ளிக்கு வருவதில்லை.

வகுப்பில் அவர்கள் மகிழ்வோடு ஓடி ஆடி விளையாடுவார்கள்.

14. குரிசிலின் நினைவாற்றல்

வகுப்பில் ஆசிரியர் ஒவ்வொருவராக வினாக் கேட்டுக் கொண்டே வந்தார். அனைவரும் விடையைச் சரியாகச் சொல்லிக் கொண்டே வந்தனர்.

குரிசில் மட்டும் ஒன்று கேட்டால் மற்றொன்றைச் சொன்னான். ஆசிரியர் மீண்டும் கேட்டார். குரிசில் தடுமாறினான். சரியான விடையைச் சொல்லவில்லை.

கரிக்கோலை எடு, என்றார் ஆசிரியர். குரிசில் பையைத் துழாவினான். ஆனால் கரிக்கோல் அவனது சட்டைப் பையிலேயே இருந்தது. குரிசிலின் செயலைக் கண்ட ஆசிரியர் குரிசிலைத் தனது அருகே அழைத்தார்.

ஒவ்வொரு பொருளையும் எப்படி வைக்கவேண்டும் என்று விளக்கினார். பள்ளிக்கு வந்ததும் மிதியடிகளை வரிசையாக வைக்கவேண்டும். உணவுக்கலனை அதற்குரிய இடத்தில் வைக்கவேண்டும். பொத்தகப் பையில் பொத்தகங்களை வரிசையாக அடுக்கவேண்டும். ஒரு பொருளை எங்கு வைக்கிறோமோ, அதே இடத்தில்தான் என்றுமே வைக்கவேண்டும்.

ஒவ்வொரு செயலிலும் நாம் ஒழுங்கு முறையைக் கடைபிடிக்கவேண்டும். இது நம் நினைவாற்றலை அதிகரிக்கும். என்றார் ஆசிரியர்.

அன்று முதல் குரிசில் தனது ஒவ்வொரு செயலையும் நிதானமாக, ஒழுங்காகச் செய்யத் தொடங்கினான்.

குரிசிலின் நினைவாற்றல் அதிகரித்தது. குரிசிலை அனைவருமே பாராட்டத் தொடங்கினார்கள்.

15. மஞ்சு மாதவி

மஞ்சு : காலையில் எத்தனை இட்டலி சாப்பிட்டாய் ?
மாதவி : 3 இட்டலி, ஒரு குவளைத் தேநீர்.
மஞ்சு : மதியம் என்ன சாப்பிடுவாய் ?
மாதவி : 1 தட்டுச் சோறு.
மஞ்சு : இரவு என்ன சாப்பிடுவாய் ?
மாதவி : 1 தட்டுச் சோறு.
மஞ்சு : ஒருநாளைக்கு நீ சாப்பிடுவதைக் கூறு.
மாதவி : 3 இட்டலி, 2 தட்டுச் சோறு.
மஞ்சு : ஒரு வாரத்திற்கு நீ சாப்பிடுவதைக் கூறு.
மாதவி : 21 இட்டலி, 14 தட்டுச் சோறு.
மஞ்சு : ஒரு மாதத்திற்கு நீ சாப்பிடுவதைக் கூறு.
மாதவி : 84 இட்டலி, 56 தட்டுச் சோறு.
மஞ்சு : ஒரு ஆண்டுக்கு நீ சாப்பிடுவதைக் கூறு.
மாதவி : அடேயப்பா மலைபோல அல்லவா உணவைக் குவித்து வைக்க வேண்டும்.

மாதவியும் மஞ்சுவும் பேசிக்கொண்டிருக்கும் பொழுது அவர்களது ஆசிரியை அங்கு வந்தார்கள். மஞ்சு நீ சொல்வது உண்மைதான். ஒரு ஆண்டில் நாம் உண்ணும் உணவை சேர்த்து வைத்தால் அது ஒரு மலை போலத்தான் இருக்கும். ஒரே நாளில் இந்த மலையளவு உணவைச் சாப்பிட முடியுமா ?

கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிடுவதால்தான் இந்த மலையளவு உணவைச் சாப்பிட முடிகிறது. இது போலத் தான் படிப்பும். ஒரே நாளில் புத்தகம் அனைத்தையும் படித்துவிட முடியுமா ? தினமும் ஒவ்வொரு பாடமாக, ஒவ்வொரு கருத்தாக படித்து, மனதுள் நினைவு படுத்திக் கொண்டே வந்தால் மிகப் பெரிய பொத்தகத்தைக்கூட படித்துவிட முடியும்.

தேர்வு நாளன்று மட்டும் படிக்காமல், தினமும் படித்து வந்தால், எந்தப் பாடமும் எளிமையாகத்தான் இருக்கும் என்றார்

அக்கா. கேட்டுக் கொண்டிருந்த மஞ்சுவும், மாதவியும் ஒவ்வொரு நாளும் இடைவிடாது கருத்தாகப் படிப்பது என உறுதி எடுத்துக் கொண்டனர்.

16. குறுக்குவழி

செழியனும், வேங்கையனும் நண்பர்கள். இருவரும் ஒன்றாகவே செல்வார்கள். ஒன்றாகவே விளையாடுவார்கள். ஒரே வண்ணத்திலேயே உடை உடுத்துவார்கள்.

அன்று ஞாயிற்றுக் கிழமை. அருகிலுள்ள உயர்நிலைப் பள்ளியின் விளையாட்டுத் திடலுக்கு விளையாடச் சென்றனர். குறுக்கு வழியில் சென்றால் விரைவாகச் செல்லலாம். அனால் அந்த வழி ஒத்தையடிப் பாததைதான். பாதையில் முட்கள் நிறைய இருக்கும்.

செழியனும், வேங்கையனும் முட்களைப்பற்றிக் கவலைப்படாமல், குறுக்கு வழியில் நடந்தனர். குறுக்கு வழியில் ஒரு பள்ளம் இருந்தது. அதில் தண்ணீர் தேங்கி இருந்தது. செழியன் மெதுவாக நடந்தான். வேங்கையன் வேகமாகத் தாண்டினான். தாண்டமுடியவில்லை. கால் தடுக்கிக் கீழே விழுந்தான். முழங்காலில் அடி பட்டது. காயம் ஆனது. வேங்கையன் ஓ... என அலறிக்கொண்டே கீழே அமர்ந்தான். காலிலிருந்து இரத்தம் சொட்டியது.

செழியனுக்கு ஆசிரியர் சொன்னது நினைவுக்கு வந்தது அருகிலிருந்த குப்பைமேனிச் செடியைப் பிடுங்கி, கசக்கிக் காயத்தில் சாறு ஊற்றினான். வேங்கையனுக்குக் காயம் அதிகமாக எரிந்தது. பல்லைக் கடித்துக் கொண்டான்.

இரத்ததம் சொட்டுவது நின்றது. நடக்க முடியவில்லை. நொண்டி நொண்டி நடந்தான். செழியனும் வேங்கையனும் இனிமேல் அந்தக் குறுக்கு வழியில் செல்வது இல்லை என்று முடிவெடுத்துக் கொண்டனர்.

இருவரும் விளையாடாமலேயே வீட்டுக்குத் திரும்பினர்.

17. நேரந் தவறுகை

பூவிழி பள்ளிக்குத் தாமதமாகத்தான் வருவாள். 9.30க்கு முதல் மணி என்றால் 9.45 க்குத்தான் வருவாள். அதற்குள் நாளவை முடிந்து பள்ளி செயல்படத் தொடங்கிவிடும்.

ஆசிரியர் அன்பாகச் சொன்னாலும் கேட்கமாட்டாள். கடுமையாக மிரட்டிச் சொன்னாலும் கேட்கமாட்டாள். ஒவ்வொரு நாளும் தாமதமாகத்தான் வருவாள். உரிய நேரத்திற்கு வரவேண்டும் என்று அவள் நினைத்தே இல்லை.

அம்மா, அப்பா, தாத்தா அனைவரும் பூவிழியிடம் அன்பாக இருப்பார்கள். அன்று விடுமுறை. அனைவரும் திருமூர்த்திமலைக்குச் செல்லத் திட்டமிட்டனர்.

காலை 8.00 மணிக்கு முதல் பேருந்து. அடுத்த பேருந்து 11 மணிக்குத்தான். தாத்தா முதல் நாளே 8.00 மணிக்குக் கிளம்பவேண்டும் என்று சொல்லி இருந்தார்.

அம்மா, அப்பா, தாத்தா அனைவரும் 7.30 மணிக்கே அணியமாகி விட்டனர். செல்வி தூங்கி, எழுந்து, பல்துலக்கி, தலைவாரி, உடைஉடுத்தி..நேரம் நகர்ந்து கொண்டே இருந்தது

7.45 மணிக்கு வேகம் வேகமாகக் கிளம்பினர். பேருந்து நிலையத்தை அடைவதற்குள் 8.05 ஆகிவிட்டது. முதல் பேருந்து சென்று விட்டது. இனி 11.00 மணிக்குத்தான். அனைவரும் பூவிழியைப் பார்த்தனர். ஆனால் யாரும் திட்டவில்லை. பூவிழி என்னால் தானே தாமதமானது என்று தலை கவிழ்ந்தாள். வருந்தினாள்.

அன்று முதல் பூவிழி எந்த இடத்திற்கும் உரிய நேரத்திற்குச் செல்லவேண்டும் என்று உறுதி எடுத்தாள்.

இப்பொழுதெல்லாம் பூவிழி பள்ளிக்கு உரிய நேரத்திற்கு வந்து விடுவாள்.

18. தண்ணீர்த் தொட்டி

கோமகன் வீட்டில் தண்ணீர்த் தொட்டி இருந்தது. தொட்டி நிறைய தண்ணீர் இருந்தது. அன்று கோமகனின் அம்மா பக்கத்து ஊர் சந்தைக்குப் பொருள்கள் வாங்கச் சென்றுவிட்டார். கோமகன் வீட்டில் மகிழ்வாக இருந்தான்.

குழாயில் தண்ணீா பிடித்து, மணலில் ஊற்றி, குழைத்து, வீடுகட்டினான், இட்டலி சுட்டான், பொம்மைகள் செ-தான், விளையாட்டு முனைப்பில் திறந்த குழாயை ஒழுங்காக மூடவில்லை. தண்ணீர் சொட்டு சொட்டாக விழுந்தது. சொட்டுத் தண்ணீர்தானே என்று அலட்சியமாக இருந்தான். தண்ணீர் சொட்டிக் கொண்டே இருந்தது. மாலை வரை கோமகன் விளையாடிக் கொண்டே இருந்தான்.

மாலை ஐந்து மணியானது.....

கை கால்களெல்லாம் மண், உடையெல்லாம் சேறு அப்பிக்கிடந்தது. அம்மா வந்தால் திட்டுவார்களே என்று குழாயின் அருகில் சென்று திருகினான். தண்ணீர் வரவில்லை. தண்ணீர் சொட்டு சொட்டாகத் தொடர்ந்து விழுந்ததால், தண்ணீர் முழுவதும் வெளியே சென்றுவிட்டது, கோமகன் கலங்கினான்.

சேற்றை எப்படிக் கழுவுவது என்ற வருத்தத்தோடு படுத்தான். அப்படியே உறங்கி விட்டான்.

இரவு வீடு வந்த அம்மா கோமகனின் அலங்கோலத்தைக் கண்டனர். கோமகனை எழுப்பி கை, கால் உடைகளிலுள்ள சேறுகளைக் கழுவி விட்டனர்.

தொட்டியில் தண்ணீர் இல்லை. சொட்டு சொட்டாக விழுந்ததால் தொட்டியின் முழுத் தண்ணீரும் தீர்ந்துவிட்டது. எனவே இனிமேல் குழாயை என்றும் நன்றாக மூடிவைக்க வேண்டும் என்று அன்போடு கூறினார்.

19. மைனா குருவி

மைனா குருவி அழகாக இருக்கும்.

சின்னத் தலையை ஆட்டி ஆட்டி நடக்கும்.

மிளகு போன்ற கண்கள் இருப்பதே தெரியாது. மஞ்சள் வண்ண அலகால் புழுவைக் கொத்திப் பிடிக்கும். வாயைத் திறந்து கொண்டு, சின்னக் கால்களால் தத்தித் தத்தி நடக்கும்.

தோட்டத்தைச் சுற்றிலும் மைனாக்குருவிகள் கூ..கூ.. என்று கத்திக் கொண்டே அங்கும் இங்கும் நடந்தன. பறந்தன. ஒரு குருவி பறந்தால் அனைத்துக் குருவிகளும் பறந்தன.

திடீரென அனைத்துக் குருவிகளும் கீச்.. கீச்.. என்று சத்தமிட்டபடி ஒரு குருவியைக் கொத்த ஆரம்பித்தன. அந்த ஒரு குருவியின் தலைமயிர் சிலிர்த்து இருந்தது. எதிர்த்துப் போராடியது. அந்த ஒரு குருவியை ஒவ்வொரு குருவியும் மாற்றி மாற்றிக் கொத்தியது. அந்தக் குருவியைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

என்ன நடக்கிறது என்று பார்க்க அருகில் சென்ற பொழுது, அனைத்துக் குருவிகளும் பறந்தோடின. கொத்திக் கொண்டிருந்த குருவியையும் அழைத்துக் கொண்டு பறந்தோடின. ஒரு குருவி கூட இருக்கவில்லை.

தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்த குருவிகள், பொதுவான எதிரி வருவதைக் கண்டதும், ஒன்றாகச் சேர்ந்து தப்பி ஓடியது வியப்பாக இருந்தது.

பொது எதிரி வரும்பொழுது நாம் அனைவரும் ஒன்றுபட்டு நிற்கவேண்டும் என்கிற உயரிய உண்மையை அந்தச் சின்ன மைனாக் குருவிகள் வழியாக அறியமுடிந்தது.

20. முதல் திருட்டு

கோகுல் முதல் வகுப்பில் படிப்பவன். அவன் ஒருநாள் அம்மாவுடன் கடை வீதிக்குச் சென்றான். அம்மா மளிகைக் கடையில் அரிசி வாங்கினார். மளிகைக் கடையில் அனைத்துப் பொருள்களும் இருந்தன. கோகுல் வியப்போடு அவற்றைப் பார்த்துக்கொண்டு நின்றான்.

கடையின் ஒரு ஓரத்தில் கரிக்கோல் கட்டித் தொங்க விடப்பட்டு இருந்தது. கரிக்கோல் அழகாக சிவப்பு வண்ணத்தில் இருந்தது. கோகுல் கரிக்கோலை எடுக்க விரும்பினான். கடைக்காரர் திரும்பிய பொழுது கோகுல் கரிக்கோலை எடுத்துப் பையில் வைத்துக் கொண்டான். கோகுல் கரிக்கோலை எடுத்ததை யாரும் பார்க்கவில்லை.

அம்மாவும் கோகுலும் வீட்டிற்கு வந்தனர். கோகுலின் பையில் கரிக்கோல் இருந்தது. அதைப்பார்த்த அம்மா " என் புத்திசாலிப் பையா ஏது இது" என்றாள் ? கடையில் எடுத்தேன் என்றான் கோகுல். சமர்த்துப் பையன் என்று அம்மா தட்டிக் கொடுத்தாள்.

கோகுல் ஒவ்வொரு பொருளாகத் திருடிக் கொண்டு வந்தான். அம்மா கண்டிக்கவேயில்லை.

கோகுல் வளர்ந்து பெரியவனானான். திருட்டுப் பழக்கமும் வளர்ந்தது. மிகப் பெரிய திருடனானான்.

கோகுல் ஒருநாள் கடையில் புகுந்து திருடும் பொழுது மாட்டிக் கொண்டான். கடைக்காரரும், ஊராரும் கோகுலை மரத்தில் கட்டி வைத்து அடித்தனர்.

காவலரிடம் ஒப்படைத்தனர். வழக்கைக் கேட்ட நடுவர் கோகுலுக்கு ஓர் ஆண்டுகாலம் சிறை தண்டனை அளித்தார். காவலர்கள் சிறையில் அடைத்தனர்.

கரிக்கோல் திருடியபொழுதே அம்மா கண்டிக்காததால்தான் கோகுல் மிகப் பெரிய திருடனானான்.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா ?

21. சேமிப்பு

மேகம் கருத்தது, மழை பெய்தது, தட தடவென இடி இடித்தது. மின்னல் மின்னியது. வானத்திலிருந்து துளித் துளியாகத் தண்ணீர் சொட்டியது.

கனிமொழி மழைத்துளியில் நனைந்தாள். அவளது உடையெல்லாம் நனைந்தது. வீட்டின் ஓட்டிலிருந்து தண்ணீர் சொட்டு சொட்டாகச் சொட்டியது.

வீட்டிற்குள் சென்று ஒரு குவளையை எடுத்து வந்தாள். தண்ணீர் விழும் இடத்தில் வைத்தாள். தண்ணீர் சொட்டு சொட்டாகக் குவளையில் விழுந்தது. குவளை பத்து நிமயத்தில் நிரம்பி வழிந்தது.

இன்னொரு குவளையையும் எடுத்து வைத்தாள். அதுவும் நிரம்பி வழிந்தது. சொட்டு சொட்டாகத் தண்ணீர் விழுந்து குவளை நிரம்பி வழிவது கனிமொழிக்கு வியப்பாக இருந்தது. சிறுதுளி பெருவெள்ளம் ஆவது கண்டு வியந்தாள்

ஒவ்வொரு நாளும் கிடைக்கிற காசுகளை இப்படிக் குவளையில் போட்டு வைத்தால் குவளையில் காசு நிறைந்து வழியுமல்லவா ? என்று எண்ணினாள். அம்மாவிடம் சென்று இது பற்றிக் கூறினாள்.

அம்மா சந்தைக்குச் சென்று ஒரு உண்டியல் வாங்கி வந்தாள். அது அழகாக மாம்பழவடிவில் இருந்தது. அந்த உண்டியல் கனிமொழிக்கு மிகவும் பிடித்திருந்தது.

கனிமொழி ஒவ்வொரு நாளும் காசுகளை சேமிக்கலானாள்.

(முதல் மற்றும் இரண்டாம் வகுப்பு
மாணவர்கள்படித்து மகிழ உதவுகிற
இக்கதைகளை எழுதியவர் - பொள்ளாச்சி நசன்.)

www.thamizham.net
pollachinasan@gmail.com
Phone: (04259) 221278
Mobile : 94422 65164